# ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL
# தமிழ் மாநிலம்

**தேதி:-15.11.2017**

அன்பார்ந்த தோழரகளே,

தமிழ் மாநில ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL கூட்டம் CGM அலுவலகத்தில் உள்ள NFTE சங்க அலுவலகத்தில் SNEA மாநில செயலாளர் தோழர் R.ராஜசேகர் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் BSNLEU, NFTE, SNEA, AIBSNLEA, SEWA BSNL, AIBSNLOA, BTEU, FNTO மற்றும் TEPU ஆகிய சங்கங்களின் மாநில செயலாளர்கள்/பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர். விவாதங்களுக்கு பின் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன:-

- 16.11.2017 அன்று நடைபெற உள்ள மனித சங்கிலி இயக்கத்தை வெற்றிகரமாக தமிழகம் முழுவதும் நடத்திட வேண்டும் என்றும், சென்னை தலைமை பொது மேலாளர் அலுவலகத்தில் வளாக முகப்பில் இருந்து நடத்துவது என்றும், அதில் பெரும்பாலான தோழர்கள் பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. (அகில இந்திய அளவில் 14.11.2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த இயக்கத்தின் தேதியை 23.11.2017 என மாற்றப்பட்டுள்ளது. நாமும் தமிழகத்தில் அகில இந்திய முடிவினை முழுமையாக அமலாக்குவோம்).
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜர் கொடுக்கும் இயக்கத்தை அனைத்திந்திய சங்கத்திடம் இருந்து மகஜரின் நகல் கிடைக்கப்பெற்றவுடன் விரைவில் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. தமிழகத்தில் உள்ள 40 மக்களவை உறுப்பினர்களுக்கும் 18 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கும் இந்த மனுவை திட்டமிட்டு தரவேண்டும். (அகில இந்திய அளவில் 14.11.2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில் மனு கொடுப்பதற்கான கடைசி தேதியினை 30.11.2017 என மாற்றப்பட்டுள்ளது.)
- தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாநில சங்க தலைவர்கள் ஒன்றாக இணைந்து பங்கேற்கும் வேலை நிறுத்த விளக்க கூட்டத்தை நடத்த வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த விளக்கக் கூட்டத்திற்கான தேதியினை மாவட்ட செயலாளர்களிடம் இருந்து பெறுவது என்றும் இதற்கான பொறுப்பினை கீழ்கண்ட மாநில செயலாளர்களிடம் வழங்கியுள்ளது. அந்தந்த மாவட்ட செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு அனைத்து மாவட்ட செயலாளர்களின் ஒப்புதலுடன் தேதியை தெரிந்துக் கொண்டு 16.11.2017 அன்று நடைபெற உள்ள அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

AIBSNLEA - நீலகிரி, கோவை, ஈரோடு மற்றும் சேலம்.

SNEA - தர்மபுரி, வேலூர், கடலூர் மற்றும் பாண்டி

NFTE- - கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி மற்றும் காரைக்குடி

BSNLEU - மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில்.

இறுதியாக தமிழ் மாநில ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNLன் பொருளாளர் தோழர் P.மோகன் நன்றி கூறி கூட்டத்தை முடிவு செய்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

| | | | | |
|---|---|---|---|---|
| **A.பாபு ராதாகிருஷ்ணன்** | **K.நடராஜன்** | **R.ராஜசேகர்** | **C.துரையரசன்** | **C.பலராமன்** |
| **BSNLEU** | **NFTE** | **SNEA** | **AIBSNLEA** | **SEWA BSNL** |
| Sd/- | sd/- | | Sd/- | Sd/- |
| **K.கிருஷ்ணன்** | **G.சரவணகுமார்** | **R.அன்பழகன்** | **துரைசாமி** | **M.பாலகிருஷ்ணன்** |
| **TEPU** | **AIGETOA** | **NFTE STR** | **AIBSNLOA** | **PEWA** |

**தமிழ் மாநில செயலாளர்கள்.**